முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

முன்னிலை: திரு.இரா. சுப்பையா, பி.ஏ., பி.எல்.,

1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2020ம் ஆண்டு ஜூன் 29ம் நாள் திங்கள்கிழமை

திருவள்ளுவராண்டு ஸ்ரீவிளம்பி ஆனி 15ம் நாள்

**இ.ம.எண்.1/2019 இன் அ.வ.எண்254/2018**

1.பேராச்சி செல்வி

2. மந்திரமூர்த்தி ... மனுதார்கள்/1,2 பிரதிவாதி

-எதிர்-

1. பி.கணேசன்

2. பாப்பம்மாள்

3. மாரியம்மாள் ... எதிர்மனுதார்கள்/வாதி/3,4 பிரதிவாதிகள்

இந்த மனுவானது 13.03.2020 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதார்கள்/1,2 பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.சங்கர், பி.ஏ., பி.எல்., அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதார்/பிரதிவாதி தரப்பில் திரு.எஸ்.ஆறுமுகராஜ், பி.எஸ்.சி., பி.எல்.,அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் போதி வாய்ப்பு வழங்கியும், மறுப்புரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில், மறுப்புரை இல்லை என தெரிவிக்கப்பட்டும், இரு தரப்பினர்களின் வாதங்களைக் கேட்டும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்...

<u>உத்தரவு</u>

1) இம்மனுவானது எதிர்வழக்குரையில் சீர்திருத்தம் செய்வதற்கு அனுமதி அளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை முறைசட்டம் பிரிவு கட்டளை 9 விதி 17 மற்றும் பிரிவு 151ன்படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம் -**

இம்மனுவில் 1வது எதிர்மனுதாரர்/வாதி 1வது தபசில் 3வது அயிட்ட சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரமும், மேற்படி சொத்தில் 3,4 பிரதிவாதிகள் அனுபவத்திற்கு இடைஞ்சல் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், 2வது தபசில் ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தவறுதலாக தாவா சொத்துப் பற்றிய சில விபரங்கள் கூறப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் வீட்டுடன் சேர்ந்து மேற்கே கையிருப்பாக காலியிடம் உள்ளதாகவும், மேற்படி கையிருப்பு இடம் வழியாக மனுதாரர் வீட்டின் மேற்கு சுவரை பராமரிப்பு செய்து வருவதாகவும், மனுதாரர் வீட்டிற்கு கிழக்கே தென்வடலாக பொது முடுக்கு உள்ளதும், மேற்படி விபரங்களை எதிர்வழக்குரையில் கூறப்படாமல் இருந்தது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல எனவும், தற்போது வழக்கறிஞரை வழக்கு விசாரணை சம்மந்தமாக சந்தித்த போது தான் தாங்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் தெய்வாதினமாக ஏற்பட்ட தவறுகள் பற்றி விவரம் தெரிய வந்ததாகவும், எனவே தாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளதும், இந்த சீர்திருத்தத்தால் எதிர்மனுதர்களுக்கு எந்த கஷ்ட, நஷ்டமும் ஏற்படக்கூடியதல்ல எனவும், மாறாக தங்களுக்கு தான் அளவிட முடியாத கஷ்ட நஷ்டம் ஏற்படும் எனவும், மேலும் இந்த சீர்திருத்தத்தால் எதிர்வழக்குரையில் தங்கள் வழக்கின் தன்மையும் மாறக்கூடியதல்ல என குறிப்பிடப்படுகிறது.

**3) மறுப்புரையின் சுருக்கம் -**

இம்மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லக்கூடியதல்ல எனவும், 2வது மனுதாரர்/2வது பிரதிவாதி நன்கு கற்றறிந்த சிவில் வழக்குகளை

திறம்பட நேர்த்தியான முறையில் கையாழும் சிவில் வழக்கறிஞர் எனவும், மேற்படி வழக்கின் தபசில் விபரங்களை ஆரம்ப முதலே நன்கு அறிந்த 2வது மனுதாரர் எதிர்வழக்குரையில் தேவாதினமாக தவறுகள் ஏற்பட்டதாக கூறியிருப்பது முற்றிலும் பொய் எனவும், 1வது எதிர்மனுதாரர்/வாதியை கஷ்ட நஷ்டம் படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்வுக்குரிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்க உகந்ததா? என்பதாகும்.

5). இரு தரப்பும் கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்/1,2 பிரதிவாதிகள் தரப்பில், 1வது எதிர்மனுதாரர் பிராது 1வது தபசில் 3வது அயிட்ட சொத்தைப் பொறுத்து விளம்புகை பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் 2ம் தபசில் ஆக்கிரமிப்பை அகற்ற கோரி செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்திருந்த நிலையில், மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில், தவறுதலாக தாவா சொத்து பற்றிய சில விபரங்கள் கூறப்பட்டுள்ளதாகவும், தங்கள் வீட்டுடன் சேர்த்து மேற்கே கையிருப்பாக காலி இடம் உள்ளதாகவும், மேற்படி காலி இடம் வழியாக தங்கள் வீட்டின் மேற்கு சுவரை பராமரித்து வந்ததாகவும், தங்கள் வீட்டிற்கு கிழக்கே தென்வடல் பொது முடுக்கு உள்ளதாகவும், மேற்கண்ட விபரங்களை சரியான முறையில் எதிர்வழக்குரையில் கூறப்படாமல் இருந்தது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், வழக்கு விசாரணைக்காக வழக்கறிஞரை சந்தித்த போது தான் மேற்கண்ட தவறுகள் பற்றி தெரிய வந்ததாகவும், எனவே எதிர்வழக்குரையை சீர்திருத்தம் செய்ய அனுமதி அளிக்க வேண்டியது அவசியம் என்றும், கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்ட நிலையில், 1ம் எதிர்மனுதாரர்/வாதி

தரப்பில், 2வது மனுதாரர் நன்கு கற்றறிந்த, சிவில் வழக்குகளை திறம்பட, நேர்த்தியாக கையாளும் சிவில் வழக்கறிஞர் என்றும், எனவே தபசில் விபரங்களை பற்றி நன்கு அறிந்த 2ம் மனுதாரர் தவறுதலாக விடுபட்ட விபரங்களை எதிர்வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய கோரியுள்ள இம்மனு 1வது எதிர்மனுதாரரை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தை முன்வைத்தார்.

6) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில், அசல் வழக்கின் விசாரணை துவங்காத நிலையில் உள்ளது தெரிய வருகிறது. மனுதாரர் மனுவில் குறிப்பிடும் சீர்திருத்ததை பரிசீலனை செய்கையில், அவை மூலம் அசல் வழக்கில் புதிதாக எழுவினா ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லாத நிலையில், மனுதாரர் தனது தரப்பில் மனுவில் கண்ட சங்கதிகளைப் பொறுத்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வழியுள்ள நிலையில், ஏதிர்வழக்குரையில் சீர்திருத்தம் செய்ய அனுமதி கோருவது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுவதால் இந்த சூழ்நிலையில் இம்மனு அனுமதிக்க உகந்தல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியில் இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2020ம் ஆண்டு ஜூன் 29ம் நாளாகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது,

(ஒம்/-) இரா.சுப்பையா
1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

**1) மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை**

**2) எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் - இல்லை**

(ஒம்/-) இரா.சுப்பையா
1வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி